செ.வெ.எண்:29 நாள்:13.04.2017

" பத்திரிக்கைச்செய்தி "

## 2017 – 2018 ம் நிதியாண்டிற்கான யூ.ஒய்.இ.ஜி.பி கடன் திட்டத்தில் சொந்தமாக தொழில்துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் விண்ணப்பம் சமர்ப்பித்து பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் அழைப்பு!

வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குவதற்காக தமிழக அரசால் (யூ.ஒய்.இ.ஜி.பி) திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சம் ரூ.10 லட்சம் வரையிலும், சேவைத்தொழில்களுக்கு அதிகபட்சம் ரூ.3 லட்சம் வரையிலும், வியாபாரத் தொழில்களுக்கு ரூ.1 லட்சம் வரையிலும் உள்ள தொழில்களை இத்திட்டத்தின் கீழ் துவங்கலாம்.

இத்திட்டத்தில் பயன்பெற குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 வயதுக்கு மேற்பட்ட தனிநபர்கள் இத்திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம். பொதுப்பிரிவினர் அதிகபட்சம் 35 வயதுக்குள்ளும், சிறப்புப்பிரிவினர்களான பட்டியலிடப்பட்ட இனத்தவர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் படைவீரர்கள் / மாற்றுத்திறனாளிகள் / திருநங்கையர்கள் ஆகியோர் 45 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,50,000த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். பொதுப்பிரிவினர் திட்ட மதிப்பில் 10 விழுக்காடும், சிறப்புப்பிரிவினர் 5 விழுக்காடும் பங்களிப்பு செய்ய வேண்டும். மீதமுள்ள தொகை வங்கி கடனாக வழங்கப்படும். இக்கடன் பெறுவதற்கு சொத்துப்பிணையம் தேவையில்லை. இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறும் பயனாளிகளுக்கு திட்டமதிப்பீட்டில் 25% மானியம் அதிகபட்சமாக ரூ.1,25,000/– தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், 69/10, சத்தியமூர்த்தி நகர், கரூர்–639 007 என்ற முகவரியில் நேரில் தொடர்புகொண்டு இக்கடன் திட்டத்திற்கான விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பத்துடன் கூடிய புகைப்படம், தாங்களே தயாரித்த திட்ட அறிக்கை, கல்விச்சான்று, குடும்ப அடையாள அட்டை, சாதிசான்று, முன்னாள் படை வீரர், மாற்றுத்திறனாளிகள் ஆகியவற்றிற்கான சான்றுகளுடன் இரட்டை நகல்களில் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

இத்திட்டத்தின்கீழ் ஆயத்த ஆடைகள் தயாரித்தல், பாக்குமட்டை தட்டு தயாரித்தல், டிஜிட்டல் பிரிண்டிங், காலனி தயாரிப்பு, ஹாலோ பிளாக்குகள் தயாரிப்பதற்கும், லேத் தொழில், லேபிள் பிரிண்டிங், கோன் வைண்டிங், வலைதள மையம், பவர்லூம், போட்டோ ஃப்ரேம் வேலைப்பாடுகள், உணவகம், தையல் நிலையம், வீடியோ கவரேஜ் போட்டோ ஸ்டுடியோ, அழகு நிலையம், மரவேலைப்பாடுகள், பர்னிச்சர் மற்றும் பாத்திரங்கள் வாடகைக்கு விடுதல், வாடகைகார், நகலகம், கைபேசி பழுதுநீக்கம், மளிகைக்கடை, உலர்மாவு தயாரித்தல் உள்ளிட்ட ஏனைய தொழில்களுக்கு மனுதாரர் விண்ணப்பிக்கலாம். வங்கியில் கடன் ஒப்பளிப்பு பெறுபவர்கள் மேலாண்பயிற்சி முடித்தவுடன் பயிற்சி சான்றிதழ், அதனை தொடர்ந்து நிதியுதவி வழங்கப்பட்டு, அதன் பிறகு திட்டமதிப்பீட்டில் 25% மானியம் அதிகபட்சமாக ரூ.1,25,000/– மட்டும் வழங்கப்படும்.

இந்த திட்டத்தினை பயன்படுத்தி, புதிய தொழில்கள் தொடங்கி வேலைவாய்ப்பை பெருக்கி, பொருளாதார ஏற்றம் பெற்று வாழ்வில் வளம்பெற கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

**வெளயீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**